சுற்று நிருபம் 04/2004(1)

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.
வடக்கு மாகாணசபை.
கைதடி.
08.12.2017

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்

பொது, மாகாணசபை, மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை தேர்தல்கள்

மேற்படி விடயம் தொடர்பான எனது 2004.03.12ந் திகதிய 04/2004 சுற்றறிக்கையின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

இச்சுற்றறிக்கையின் 02வது பந்தியின் 2.3, 2.4 பிரிவுகள் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றன.

**2.3.** வேட்பு மனுத்தாக்கல் செய்த பின் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளெதிலும் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.

**2.4.** வேட்பு மனுத்தாக்கல் செய்த பின் தேர்தலில் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் குறித்த உறுப்பினரது பதவி தாமாகவே வெறிதாக்கியதாக கருதப்படும்.

அதே சுற்றறிக்கையின் 2வது பந்தியில் 2.5 பிரிவு சேர்க்கப்படுகின்றது.

**2.5** தேர்தல் முடிவுற்ற பின்னர் குறித்த சட்டவாக்க அலகுக்கு தேர்வு செய்யப்படாத இயக்குனர் சபை உறுப்பினர் ஒருவர் இயக்குனர் சபையின் அனுமதியை பெற்று மீளத்தனது சேவையைத் தொடரமுடியும.

அதே சுற்றறிக்கையின் 3வது பந்தியில் 3.4 பிரிவு சேர்க்கப்படுகின்றது.

**3.4.** குறித்த சட்டவாக்க அலகுக்கு தேர்வு செய்யப்படும் பணியாளர் ஒருவர் இயக்குனர் சபை அனுமதியுடன் சம்பளமற்ற விடுமுறையில் விடுவிக்கப்படல் வேண்டும். குறித்த பதவிக் காலம் முடிவுற்றதும் இயக்குனர் சபையின் அனுமதியுடன் மீள அதே பதவியில் அமர்த்தப்பட முடியும். அதுவரை குறித்தவரின் பதவிக்கான கடமைகளுக்கென பதிலேற்பாடு செய்யப்பட வேண்டுமென்பதுடன் குறித்த ஆளணி நிரந்தர நியமனமொன்றால் நிரப்பப்படலாகாது.

அதே சுற்றறிக்கையின் 4வது பந்தி நீக்கப்படுகின்றது

மற்றைய சுற்றுநிருப ஏற்பாடுகள் மாற்றமேதுமின்றி அவ்வாறே அமுலிலிருக்கும்.

இச் சுற்றுநிருப அறிவித்தல் வடக்கு மாகாண கௌரவ கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனின் 07.12.2017 திகதிய அங்கீகாரத்துடன் வெளியிடப்படுகின்றது.

o/c

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாணம்.

பிரதி:- கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு/ வவுனியா/மன்னார் - தகவலுக்கும் உறுதிப்படுத்தலுக்கும்.